அறிவிப்புகள்—தொடர்ச்சி.

நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஐ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (17—11—1987) காலை 10–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

101. உலக வங்கியின் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் நீரகற்று வாரியத்தினருக்கு, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தாரால் விற்கப்படும் 'அரசு' கல்நார் சிமெண்டினாலான அழுத்தக் குழாய்கள் மற்றும் துணைக் கருவிகள் மீது சலுகை முறையில் வரி விதிப்பது